**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வரலாறு- தரம் 10 / மூன்றாம் தவணை - வாரம் - 6**

**தயாரிப்பு : திருமதி.S.சுஜிதா ( கே /தெஹி /களனி த.வி )**

# கண்டி இராச்சியம்

ஆரம்பமும் பரம்பலும்

01)பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1.கண்டி இராச்சியத்தின் வேறு பெயர்கள் நான்கினைக் குறிப்பிடுக.

2.கண்டி இராச்சியத்தின் சிறப்பியல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

3.கண்டி இராச்சியம் எம்மன்னனது காலத்தில் கோட்டைக்கு அடிமைப்பட்ட அரசொன்றாக செயற்பட்டது?

4.கண்டி இராச்சியத்தை அண்டியுள்ள பிரதேசங்களை ஒன்றுபடுத்தி முதல்முறையாக அரசொன்றை உருவாக்கிய மன்னன் யார்?

5.கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன் யார்?

6.சேனாசம்பத விக்கிரமபாகுவின் மகன் யார்?

7.கண்டி இராச்சியத்தின் இரண்டாவது மன்னன் யார்?

8.ஜயவீர பண்டார ஆட்சி செய்த காலப்பகுதியைக் குறிப்பிடுக.

9.ஜயவீர பண்டாரவின் நண்பன் யார்?ஜயவீர பண்டார நண்பனுக்கு செய்த உதவி யாது?

10.ஜயவீர பண்டாரவின் மகன் யார்?

11.கண்டி இராச்சியத்தின் மூன்றாவது மன்னன் யார்?

12.கரலியத்த பண்டார எவ் அந்நிய நாட்டினருடன் உடன்பாடான கொள்கையைக் கடைபிடித்தான்?

13.கண்டியப் பிரதானிகள் சீதாவக்கை மன்னனான இராஜசிங்கனுக்கு தமது ஆதரவை வழங்கியதன் காரணம் யாது?

14.முதலாம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிக்க உதவி புரிந்த கண்டிய பிரதானி யார்?

15.முதலாம் இராஜசிங்க மன்னனின் ஆக்கிரமிப்புக்கு பயந்து போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தோர் யாவர்?

16.கிறிஸ்தவ சமயத்தை தழுவிக் கொண்ட குசுமாசனதேவி , யமசிங்க பண்டார ஆகிய இருவரினதும் கிறிஸ்தவ மத பெயர்களைக் குறிப்பிடுக.

17.சீதாவக்கை ஆட்சியாளனான முதலாம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றிய ஆண்டு எது?

18.வீரசுந்தர பண்டார ஏன் கொலை செய்யப்பட்டான்?யாரால் கொலை செய்யப்பட்டான்?

19.வீரசுந்தர பண்டாரவின் மகன் யார்?

20.கோணப்பு பண்டாரவின் கிறிஸ்தவ பெயர் யாது?

21.கண்டி இராச்சிய பிரதானிகளிடையே முதலாம் இராஜசிங்க மன்னன் மீது அதிதிருப்தி ஏற்பட்டதற்கான காரணம் யாது?

22.போர்த்துக்கேயர்கள் கண்டி இராச்சியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவன் யார்?அவர்கள் எவ்வாறு கண்டி இராச்சியத்தில் தனது அரசை உருவாக்கினர்?

23.யமசிங்க பண்டார கண்டி இராச்சியத்திற்கு அனுப்பப்பட்ட போது அவனது பாதுகாப்புக்காக உடன் அனுப்பப்பட்ட குழுவில் இருந்தவன் யார்?

24.கோணப்பு பண்டார போர்த்துக்கேயரிடமிருந்து எவ்வாறு கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான்?

25.கோணப்பு பண்டார எப் பெயருடன் கண்டி இராச்சியத்தின் மன்னனான்?

26.முதலாம் விமலதர்ம சூரியனின் ஆட்சிக் காலப் பகுதியைக் குறிப்பிடுக.

27.முதலாம் விமலதர்ம சூரியன் வெற்றி கொண்ட போர்கள் மூன்றினையும் குறிப்பிடுக.

28.முதலாம் விமலதர்ம சூரியன் மன்னனான போது உதிர் கொண்ட சவால்கள் நான்கினைக் குறிப்பிடுக.

29.முதலாம் விமலதர்ம சூரியனால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

30.முதலாம் விமலதர்ம சூரியனால் மேற்கொள்ளப்பட்ட பௌத்த நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

31. முதலாம் விமலதர்ம சூரியனால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

32.முதலாம் விமலதர்ம சூரியன் கடும் காய்ச்சல் பீடிக்கப்பட்டு இறந்த ஆண்டு எது?